# ஓம் ஸ்ரீ சாயிராம் பிரசாந்தி சந்தேஷ் வினா விடை நேரம் வினா எண் 319 தலைப்பு "இலக்கை அடைதல்"

நம் அன்புக்குறிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் சத்யோபனிஷத் புத்தகம் வால்யூம் இரண்டு பக்கம் 248-253 லிருந்து தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி

கேள்வி:ஸ்வாமி வெவ்வேறு மதங்களும் வேறு வேறான ஆன்மீக பாதைகளை காட்டுகின்றன.

இவையெல்லாம் எவ்வாறு தெய்வீகத்தை உணருவதற்கு உதவுகின்றன.

எந்த அளவுக்கு இந்த ஆன்மீக பயிற்சிகளை நாங்கள் மேற்கொளள வேண்டும்.இவற்றையெல்லாம் பார்க்கும் போது இந்த ஒரு ஜன்மத்தில் வெற்றி கிடைப்பது நடவாத காரியம் போல் தோன்றுகிறதே.இவற்றை ஒதுக்கி விட்டாலோ அடடா எந்த ஆன்மீக பயற்சிகளிலும் நாம் ஈடுபடாமல் இருக்கிறோம் என்ற கவலையும் ஏற்படுகிறது.

இதற்கு வழி தான் என்ன.
தயவு கூர்ந்து எங்கள் கவலையை போக்கி அருளுங்கள் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில் :

நீங்கள் கேட்பதை பார்த்தால் ஆன்மீக பயற்சி என்றால் என்ன என்பதே உங்களுக்கு தெரியவில்லை என தோன்றுகிறது.

இந்த ஆன்மீக பயிற்சிகளில் உங்கள் மனமே ஈடுபடுகிறது.
இவை உங்களுக்கு தற்காலிக சந்தோஷத்தையும் திருப்தியையும் மட்டுமே அளிக்கின்றன.
அதே சமயம் அவைகளை பயனற்றவை என ஒதுக்கி விடவும் கூடாது.
ஆன்மீக பயற்சி என்பது உங்கள் நேரத்தை நீங்கள் இறைபக்தியில் ஈடுபடுவதற்கு உதவுவதாக இருக்க வேண்டும்.

ஸா என்றால் ஸாலோக்யம் அதாவது இறை உணர்வு என்ற சொர்கத்தில் எப்போதும் சஞ்சரிப்பது தனா என்றால் அதன் பயனான ஆனந்த்தை பெருவது என்றே அர்த்தமாகும்.
மனித மனம் என்பது இயல்பிலேயே இரட்டை தன்மை கொண்டது.
நிலையற்றது.

உதாரணமாக நீங்கள் ஒரு இடத்திற்கு பயணம் செய்யும் போது ஒரு திருடன் உங்கள் அருகில் உட்கார்ந்து கொண்டு வருகிறான் என்றால் உங்களால் நிம்மதியாக பயணம் செய்ய முடியுமா.அதை போல் மனதை கொண்டு செய்யும் சாதனைகள் உங்களுக்கு

தடையில்லாத பிரம்மானந்த்தை பெற்று தராது.சாதனைகளில் ஈடுபடுவதன் மூலம் உங்கள் உண்மை தன்மையை மறைத்துக் கொண்டிருந்த திரை அகற்றப்படுகிறது.பிறகு நீங்கள் ஆத்ம உணர்வு என்ற உண்மை உணர்வை பெறுகிறீர்கள்.

இது எங்கேயோ வெளியிலிருந்து பெறப்படுவதில்லை.
இந்த ஆன்மீக பயிற்சிகளை எவ்வளவு காலம் நீங்கள் கடைபிடிக்க வேண்டும் தெரியுமா.
உங்களுக்கு ஒரு காயம் ஏற்படும் போது அதனால் பாதிக்கப்பட்ட தோல் பகுதி காயம் ஆறும் போது தானாகவே உதிர்ந்து விடுகிறது.ஆனால் அவசரப்பட்டு அதை பிய்த்தால் காயம் பெரிதாகிவிடும்.அது போல் தன்னை பற்றிய மெய்யுணர்வை பெறும் வரை தேவை. அதன் பின் சாதனைக்கு இடமில்லை.

நீங்கள் சமையல்  செய்யும்  போது அடுப்பு தீயை பெரிதாக வைக்கிறீர்கள்.
எவ்வளவு நேரம் அப்படி வைக்க வேண்டும் என்றால் உணவு சமைக்கப்படும் வரை தான்.அதே போல் ஆன்மீக சாதனாவும் பிரம்ம ஞானம் என்ற இறையுணர்வை பெரும் வரை தான்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி அது போல் செயல்பட்டு நாங்கள் ஆத்ம ஞானம் பெற்ற பின்னர் அந்த பேருணர்வு எங்களுக்கு எப்போதும் இருக்குமா அல்லது அதை தொலைத்து விட்டு மீண்டும் அறியாமையால் வீழ்ந்து விடுவோமா.

ஸ்வாமியின் பதில்:
ஒரு போதும் அப்படி நடக்காது.
தொலைந்து போகின்ற ஒன்று ஞானமாக இருக்க முடியாது
ஞானம் என்பது எங்கோ வெளியிலிருந்து வந்து விட்டு பிறகு சென்று விடுவதல்ல.நீங்கள் அனைவரும் தெய்வீக ஞானத்தின் உருவகமே ஆவீர்கள்.இந்த பேருணர்வை நீங்கள் பெற்று விட்டால் அது உங்களுக்கு  இயல்பானதாக இருந்துவிடும்.

நீங்கள் தயிரை கடைந்து வெண்ணெய் எடுக்கிறீர்கள்.
அந்த வெண்ணெய் எங்காவது திரும்ப தயிராகுமா.அது போல் ஞானம் என்ற வெண்ணெய் கிடைக்கப் பெற்ற பிறகு அறியாமை என்ற இருள் உண்டாகாது.
ஒரு ஞானி அறியாமையில் உழலுகின்ற சாதாரண மனிதர்களுடன் பழக நேர்ந்தாலும் அவருடைய ஞானம் ஒரு போதும் மாறிவிடாது.

உங்களுக்கு ஞானம் சித்தியாகிவிட்டால் அது ஒரு போதும் உங்களை விட்டு விலகாது.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி உடல் உணர்வு என்பது ஆன்மீக முன்னேற்றத்திற்கு தடையானதா.
இந்த உடல் உணர்வு எங்களை விட்டு அகலாது என தோன்றுகிறதே.
இதற்கு என்ன செய்ய வேண்டும் என தயை கூர்ந்து கூறுங்கள் ஸ்வாமி

ஸ்வாமியின் பதில் :
நீங்கள் உடலின் மேல் அக்கறை செலுத்த கூடாது என நான் ஒரு போதும் கூறவில்லை.
உங்கள் உடல் தான் நீங்கள் ஆத்ம உணர்வு பெறுவதற்கு கொடுக்கப்பட்டுள்ள முக்கியமான கருவியாகும்.வெளியிலிருந்து பார்பதற்கு கோயில் மிக அழகாகவும் புனிதமானதாகவும் தெரியலாம்.

ஆனால் உள்ளே சென்று கர்ப கிரகத்தின் முன் நின்று அங்கே உறையும் ஆண்டவனை மனதார வணங்கினால் தான் அந்த சாந்நித்யத்தை நீங்கள் உணர முடியும்.மூல விக்ரஹத்தை கர்பகிரஹத்தில் தரிசிப்பது உங்களை களிப்படைய செய்கிறது.

உங்கள் உடம்பானது தெய்வம் குடியிருக்கும் நடமாடும் கோவிலாகும்.
அதை ஒரு போதும் உதாசீனபடுத்த கூடாது.உங்கள் மனதில் தோன்றுகின்ற கீழ்த்தரமான ஆசைகள் உங்கள் உடலை வெகுவாக பாதிக்கிறது.
மனதில் தீய ஆசைகள் தோன்றாமல் பார்த்து கொள்ளுங்கள்.
காமம் மோகம்  பொறாமை பேராசை கோபம்
வெறுப்பு என்ற இந்த ஆறு எதிரிகள் எப்போதும் உங்களை சூழ்ந்து தாக்க தயாராக இருக்கிறார்கள்.

ஆனால் இந்த எதிரிகளை நீங்கள் புத்திசாலிதனமாக வேறு திசைகளில் திருப்பி விடலாம் உதாரணத்திற்கு கோபத்தை எடுத்து கொள்ளுங்கள்.

கோபபடுவதினால் உங்களுக்கு எந்த நன்மையும் உண்டாக போவதில்லை.ஆனால் இந்த கோபத்தை உங்களின் துர்குணங்களின் மீது தீய எண்ணங்களின் மீது தீய செயல்களின் மீது திருப்பி விட்டால் அது உங்கள் குணாதிசியத்தை மேம்படுத்தும்.

இது போல் காமம் என்பதை இறைவன் பால் திருப்புங்கள். இறைவனுக்கு சேவை செய்ய அளவில்லாத ஆசை கொள்ளுங்கள்.

ஆனால் நீங்கள் சுய நலத்துடன் உலகியலான பொருட்களின் மீது  காமம் கொண்டு வாழும் போது  உங்கள் உடம்பே உங்கள் ஆன்மீக முன்னேற்றத்திற்கு தடையாக ஆகிவிடும்.

ஆதனால் உங்கள் உடலை தெய்வீக பேருணர்வை பெறுவதற்காக நீங்கள் உபயோகப்படுத்திக் கொண்டால் அது ஒரு போதும் உங்கள் ஆன்மீக முன்னேற்றத்திற்கு தடை ஆகாது.

தீய எண்ணங்களாலும் கொடுஞ் செயல்களாலும் மிருகத்தனமான நடத்தையாலும் ஹிரண்யாக்ஷன் ஹிரண்யகசிபு இராவணன் கும்பகர்ணன் சிசுபாலன் கம்சன் தந்தவக்ரன் இவர்களெல்லாம் அழிந்து பட்டார்கள். கடவுளை அறிந்து கொள்ளவும்

தெய்வீக பேருணர்வை செய்வதற்காகவும் கடவுளால் மனிதனுக்கு கொடுக்கப்பட்ட பெருங் கொடையே உடலாகும்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி
மனித வாழ்க்கை கான காரணத்தையும் இலக்கையும் எவ்வாறு எளிதாக புரிந்து கொள்ளவது என்று தயவுசெய்து எங்களுக்கு எடுத்து சொல்லுங்கள் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில் :
இது மிகவும் எளிதானது.
ஒரு நோயாளி எதற்காக மருந்து சாப்பிட வேண்டும்.இந்த நோயிலிருந்து குணமாகவும் மீண்டும் நோய்வாய்ப் படாமல் இருக்கவும் மருந்து உட்கொள்ள வேண்டும்.அதை போல நீங்கள் பிறந்ததற்கான நோக்கம் மீண்டும் பிறவாமல் இருப்பதற்காகதான்.
மீண்டும் பிறவாமை என்ற இலக்கை நோக்கி செல்வதற்கு நீங்கள் தொடர்ந்து தீவிர ஆன்மீக பயிற்சிகளில் பிறவி முழுவதும் ஈடுபட்டு கொண்டே இருக்க வேண்டும்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி சத்தியத்தை தேடுதல் என்பதற்கு அர்த்தம் என்ன.
இந்த புனிதமான பணியில் நாங்கள் எவ்வாறு செயல்பட வேண்டும்.

ஸ்வாமியின் பதில்:
சத்தியத்தை தேடி செல்வது என்பதே அறியாமையை குறிக்கின்றது.
சத்தியம் எங்கும் நிறைந்திருக்கிறது எனும் போது அதை தேட வேண்டிய அவசியம் என்ன.
சத்தியமே கடவுள்.கடவுளே சத்தியம்.கடவுள் நீக்கமற எங்கும் நிறைந்திருக்கிறார்.அது போல் சத்யமும் எங்கும் நிறைந்துள்ளது.
நித்ய சத்யமான கடவுளே சிருஷ்டி அனைத்தையும் தோற்றுவித்தார்.
சிருஷ்டி அனைத்தும் இறைவனிடமே சென்று ஒடுங்க போகின்றன.
அதாவது சத்தியத்தினுள் ஒடுங்க போகின்றன.
நீங்கள் உங்கள் தாய் தந்தை மனைவி மக்கள் என பலருடனும் பழகுகிறீர்கள்.
ஆனால் ஒவ்வொருவருடன் பழகும் போது உங்கள் உணர்வு வித்தியாசபடுகிறது அல்லவா.
இந்த உணர்வுகளே உங்கள் பார்வையை மேம்படுத்துகிறது.
சத்தியத்தை தேடுகின்ற உங்கள் முயறசியானது எதற்காக எப்பொழுது எங்கே யாரால் எப்படி போன்ற கேள்விகளுக்கு விடை காண்பதாக இருக்க வேண்டும்.

அனைவருக்கும் நன்றி.

வர இருக்கின்ற நாட்களில் நம் ஸ்வாமியின் அருளைரைகளை மேலும் கேட்டு மகிழ்வோம்
ஜெய் சாயிராம்!